அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 13/88

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு.7
18 ஏப்ரல், 1988.

அமைச்சுச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவர்க்கும்.

புலமைப் பரிசில் பெற்று வெளிநாடு செல்வதற்கு
மட்டுப்படுத்திய கடவுச் சீட்டு வழங்குதல்.

வெளிநாட்டில் இயலத்தக்க புலமைப் பரிசில் ஒன்று அளிக்கப் பெற்ற அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் தொடர்பில் குறித்த புலமைப்பரிசிலின் காலப் பகுதிக்கு மட்டும் செல்லுபடியாகும் வகையில் மட்டுப்படுத்திய கடவுச் சீட்டு வழங்கப்படுதல் வேண்டும்.

02. வெளிநாட்டில் இயலத்தக்க புலமைப் பரிசில்களுக்கு விண்ணப்பங்களைக் கோருவதற்கான அறிவித்தல், உத்தியோகத்தர் தெரிவுசெய்யப்படுமிடத்து, அவரிடம் கடவுச் சீட்டு ஏதுமிருந்தால் அதைக் குடிவரவு, குடியகல்வுக் கட்டுப்பாட்டாளரிடம் அல்லது புலமைப்பரிசில் வழங்கும் அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டு மெனவும் புலமைப் பரிசிலின் காலப்பகுதிக்குச் செல்லுபடியாகும் வகையில் மட்டுப்படுத்திய கடவுச் சீட்டு ஒன்று அவருக்கு வழங்கப்படுமெனவும் குறிப்பிடுதல் வேண்டும். மட்டுப்படுத்திய கடவுச்சீட்டு வழங்குகை பற்றி விண்ணப்பகாரராக வரவுள்ளவர்களுக்கு முன்கூட்டியே அறிவிப்பது அவசியமாகும்.

03. புலமைப் பரிசில் வழங்கும் அதிகாரி அத்தகைய கடவுச் சீட்டுக்களுக்குரிய விண்ணப்பப் படிவங்களை புலமைப் பரிசிலின் கால அளவைக் கொடுக்கும் தழுவு கடிதத்துடன் கட்டுப்பாட்டாளருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

04. குடிவரவு, குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் புலமைப் பரிசிலுக்கு தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தருக்கு கடவுச் சீட்டு ஒன்றை வழங்குவார். அதில் அவர் குறிப்பிட்ட காலப்பகுதிக்கு மட்டும் கடவுச் சீட்டு செல்லுபடியாகுமெனக் குறிப்பிடும் புறக்குறிப்பு ஒன்றையும் எழுதுவார். எனினும் மட்டுப்படுத்துகை, புலமைப் பரிசிற் கால ஆரம்பத்திலும் முடிவிலும் மூன்று மாதங்களுக்கு இடமளிக்கும் வகையில் செய்யப்படும்.

05. மட்டுப்படுத்திய கடவுச் சீட்டு வைத்திருப்பவர் புலமைப் பரிசிற் காலப்பகுதி காலவதியாகு முன்னர் திரும்பி வர விரும்பினால் அவர் அவ்வாறு செய்யலாம். ஆனால், அவர் கல்வியைத் தொடருவதற்கு மீண்டும் வெளிநாடு செல்ல விரும்பினால் அவர் எஞ்சியுள்ள காலப்பகுதிக்கு குடிவரவு, குடியகல்வுக் கட்டுப்பாட்டாளரிடமிருந்து புதிய புறக்குறிப்பைப் பெறுதல் வேண்டும். கட்டுப்பாட்டாளர் ஒரு வழிப் பயணத்துக்கும், பயணம் செய்யும் பாதையிலுள்ள நாடுகளுள் நுழைவதற்கு அனுமதித்து கடவுச் சீட்டு வழங்கலாம்.

ஒப்பம்: டி.பி.ஐ.பி.எஸ், சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.